## உமியைக் கொடுத்து விட்டு இந்தியாவின் வளத்தை ஊதி ஊதி சாப்பிடப் போகிறது!

# இந்தியாவிடம் பொருளாதாரச் சூறையாடலை நடத்த - அமெரிக்காவுக்கு நம் நாட்டின் வாசலைத் திறந்து விட்டிருக்கிறார் பிரதமர் மோடி!

## பொருளாதார ஒப்பந்தம் குறித்து – அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!



**சென்னை, பிப்.5– ''நீ அரிசி கொண்டுவா! நான் உமி கொண்டு வருகிறேன், இரண்டையும் கலந்து ஊதி ஊதிச் சாப்பிடுவோம்'' என்பதைப் போல, அமெரிக்கா உமியைக் கொடுத்துவிட்டு இந்தியாவின் வளத்தை ஊதி ஊதிச் சாப்பிடப் போகிறது எனவும் நாட்டின் காவலாளி (சௌகிதார்) எனச் சொல்லிக் கொள்ளும் மோடி, பொருளாதார சூறையாடலை அமெரிக்கா நடத்த இந்தியாவின் வாசலைத் திறந்துவிட்டிருக்கிறார் என்றும் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி விடுத்துள்ள அறிக்கையில் கண்டித்துள்ளார்.**

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு :-

ஒரு பட்டாம்பூச்சியின் சிறகடிப்புக்கும் வரப் போகும் பூகம்பத்திற்கும் தொடர்பு உண்டு. உலகில் இரண்டு வெவ்வேறு நாடுகளில் நடக்கும் விவகாரமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்பதுதான் கேயாஸ் தியரியின் தத்துவம்! இந்த கேயாஸ் தியரி. பிரதமர் மோடியின் முகத்திரையைக் கிழித்திருக்கிறது. அமெரிக்கப் பாலியல் குற்றவாளி ஜெப்ரி எப்ஸ்டன் கோப்புகளில் உள்ள தகவல் கடந்த 30-ஆம் தேதி வெளியான பிறகு, அமெரிக்க அதிபர் டிரம்ப்பும் பிரதமர் மோடியும் அடுத்தடுத்து எடுக்கும் முடிவுகள் இந்தியாவை அதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருக்கிறது.

இந்திய பொருட்களுக்கு அமெரிக்காவில் 25 சதவிதப் பரஸ்பர வரியும், ரஷியாவிடம் இருந்து இந்தியா கச்சா எண்ணெய் வாங்குவதற்காக 25 சதவிகித அபராத வரியும் என்று மொத்தம் 50 சதவீத வரி விதிக்கப்பட்டிருந்தது. இதனால் இந்திய பொருட்களை அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. 6 நாளிலேயே இந்தியாவுக்கு விதிக்கப்பட்டிருந்த 50 சதவிகித வரியை 18 சதவீதமாக அமெரிக்க அதிபர் டிரம்ப் குறைத்தார். இடைப்பட்ட 6 நாட்களில் என்ன நடந்தது? என்பதை கேயாஸ் தியரி சொல்லும்!

### ட்ரம்ப்பின் அறிவிப்பு அதிர்ச்சியளிக்கிறது!

''அமெரிக்கா வரியைக் குறைத்தது போல, இந்தியாவும் அமெரிக்கப் பொருட்கள் மீதான வரியைப் பூஜ்யமாக்க நடவடிக்கையை முன்னெடுப்பார்கள். பிரதமர் மோடி, அமெரிக்கப் பொருட்களை மிக அதிகமாக 500 பில்லியன் டாலருக்கு (இந்திய மதிப்பில் 45.5 லட்சம் கோடி ரூபாய்) எரிசக்தி, தொழில்நுட்பம், வேளாண் பொருட்கள், நிலக்கரி மற்றும் பல பொருட்களைக் கூடுதலாக வாங்கவும் சம்மதித்துள்ளார்'' எனச் சொல்லியிருக்கிறார் ட்ரம்ப்.

இந்த அறிவிப்பு நாட்டு மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. அமெரிக்காவிடம் இருந்து விவசாயப் பொருட்களை இந்தியா இறக்குமதி செய்யும் என்று டிரம்ப் அறிவித்ததை அடிபணிந்து ஏற்றுக் கொண்டிருக்கிறார் பிரதமர் மோடி. அமெரிக்கப் பொருள்களுக்கு இறக்குமதி வரியைப் பூஜ்யமாக்க ஒப்புக்கொண்டிருக்கிறார் மோடி.

அமெரிக்க – இந்திய வர்த்தக ஒப்பந்தம் மூலம் ஒன்றிய பாஜக அரசு எடுத்துள்ள முடிவு, இந்திய விவசாயிகளுக்குப் பெரும் பாதகத்தை ஏற்படுத்தும். அமெரிக்காவின் வரியை 18 சதவிகிதமாகக் குறைக்க வைத்துவிட்டோம் எனத் தம்பட்டம் அடித்தாலும், அமெரிக்காவுடனான வர்த்தக ஒப்பந்தத்தால் இந்திய விவசாயிகளுக்கும், சிறு குறு தொழில்துறையினருக்கும் ஏற்படப்போகும் பேராபத்தை 18 சதவிகித வரி குறைப்பைக் காட்டி மறைக்க முயல்கிறது மோடி அரசு.

### இந்தியாவின் காவலாளி எனக்கூறும் மோடி அமெரிக்காவிடம் சிக்குவதா?

அமெரிக்காவிடம் இருந்து இந்திய மதிப்பில் 45.5 லட்சம் கோடி ரூபாய் அளவிற்குப் பொருட்களை வாங்கப் பிரதமர் மோடியைச் சம்மதிக்க வைத்துவிட்டோம் என அமெரிக்க அதிபர் டிரம்ப் வெற்றிக் களிப் போடு சொல்கிறார். அதாவது, இந்தியாவின் மொத்த பட்ஜெட் மதிப்பில் இது 85 சதவிகிதம். 45.5 லட்சம் கோடி ரூபாய் என்கிற யானை, இந்தியாவின் உள்ளூர் வர்த்தகம் என்கிற கரும்புக் காட்டிற்குள் நுழைந்து துவம்சம் செய்யப் போகிறது. நாட்டின் காவலாளி (சௌகிதார்) எனச் சொல்லிக் கொள்ளும் மோடி, பொருளாதார சூறையாடலை அமெரிக்க நடத்த இந்தியாவின் வாசலை திறந்துவிட்டிருக்கிறார்.

18 சதவிகித வரியை அமெரிக்க ஒன்றும் சும்மா கொடுத்துவிடவில்லை. சலுகை விலையில் கச்சா எண்ணெய்யை ரஷியாவிடம் இருந்து வாங்குவதை நிறுத்த சொல்லி, இந்தியாவுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இந்தியப் பொருட்களுக்கு அமெரிக்காவில் 18 சதவீத வரியை விதித்துவிட்டு, இந்தியாவில் விற்கப்படும் அமெரிக்கப் பொருட்களுக்குப் பூஜ்ய வரி என்று சொல்கிறது.

நீ அரிசி கொண்டுவா! நான் உமி கொண்டு வருகிறேன், இரண்டையும் கலந்து ஊதி ஊதிச் சாப்பிடுவோம் என்பதைப் போல, அமெரிக்கா உமியைக் கொடுத்துவிட்டு இந்தியாவின் வளத்தை ஊதி ஊதிச் சாப்பிடப் போகிறது. அமெரிக்க அதிபர் ட்ரம்ப்பிடம் அடிபணிந்து கிடக்கிறார் பிரதமர் மோடி. நம்மை கட்டுப்படுத்த அமெரிக்கா மாகாணங்களில் இந்தியாவும் ஒன்றா? இந்தியாவை, அமெரிக்காவிடம் மோடி அடகு வைத்துவிட்டாரா? போரே நடக்காமல், ஏவுகணைகள் ஏவாமல் இந்தியா மீது ஒரு பொருளாதாரப் போரை நடத்தியிருக்கிறது அமெரிக்கா. அதற்குத் துணை போயிருக்கிறார் பிரதமர் மோடி.

### இந்தியாவின் எதிர்காலம் வர்த்தக ஒப்பந்தத்தால் பாதிக்கும்!

அமெரிக்காவுடனான வர்த்தக ஒப்பந்தம் இந்தியாவின் எதிர்காலத்திற்குச் சிறந்தது என எப்படிக் கொண்டாட முடியும்? 45 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான அமெரிக்கப் பொருட்களை இந்தியாவிற்குள் அனுமதிக்கும் அளவிற்கு இந்தியச் சந்தையைக் கட்டுப்பாடின்றித் திறந்து வைத்தால், இந்திய விவசாயிகள், வியாபாரிகள், சிறுகுறு தொழில்துறையினரின் வாழ்வாதாரம் சீரழிந்து சின்னாபின்னமாகிவிடும்.

இந்தியாவின் மிகப்பெரிய சந்தையும், மக்கள் தொகையும் தங்கள் நாட்டின் வேளாண் பொருட்களை அதிக அளவிற்கு விற்பதற்கு உதவும். இதனால் கிராமப்புற அமெரிக்காவின் பொருளாதாரம் செழிக்கும் என்று அமெரிக்காவின் வேளாண் துறை அமைச்சர் ப்ரூக் ரோலின்ஸ் கூறியிருக்கிறார். நாட்டின் முதுகெலும்பாக இருக்கும் வேளாண்துறையை அமெரிக்காவிற்கு அடகு வைக்கும் முயற்சியா இந்த வர்த்தக ஒப்பந்தம் என்கிற சந்தேகம் எழுகிறது.

அமெரிக்காவில் இருந்து குறைந்த விலையில் சோயாபீன், சோளம், பருத்தி மற்றும் கோதுமை போன்றவை இறக்குமதியானால், இந்திய விவசாயிகளின் விளை பொருட்களுக்கான விலை உள்நாட்டுச் சந்தையில் பெருமளவில் குறையக்கூடும். பாதாம், ஆப்பிள் போன்ற பொருட்களுக்கான இறக்குமதி வரி குறைக்கப்படுவதால் வியாபாரப் போட்டி அதிகரித்து, உள்நாட்டு உற்பத்தியாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்படுவார்கள்.

### அமெரிக்க விவசாயிகளிடம் இந்திய விவசாயிகள் போட்டி போட முடியுமா?

அமெரிக்காவில் விவசாயம் என்பது பெரும்பாலும் சிறிய அளவில் நடைபெறுவதில்லை. அமெரிக்க அரசு அதிக அளவில் மானியம் தருவதாலும் வேளாண் பணிக்காகப் பெரிய இயந்திரங்கள் கிடைப்பதாலும் ஹெக்டேர் கணக்கில் பெரும் பண்ணைகளாகவே அங்கு விவசாயம் செய்யப்படுகிறது. ஆனால், இந்தியாவில் 86 சதவீதம் சிறு மற்றும் குறு விவசாயிகள் இருப்பதால் அவர்கள் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும்போது, அமெரிக்காவின் பெரும் பண்ணை விவசாயிகளுடன் போட்டி போட முடியாது. அமெரிக்க விவசாயிகளுக்கு அதிக மானியம் கிடைப்பதால் உற்பத்திப் பொருட்களை மலிவான விலைக்குத் தரும் சூழல் ஏற்படும்போது இந்திய விவசாயிகள் பெரும் நெருக்கடி நிலைக்குத் தள்ளப்படுவார்கள்.

அமெரிக்காவின் பால் பொருட்கள் மீதான வரி குறைப்பு கோரிக்கையை ஒன்றிய பாஜக அரசு ஏற்கும் சூழலில் இந்தியாவின் லட்சக்கணக்கான பால் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படுவார்கள்.

அமெரிக்காவில் இருந்து இறக்குமதியாகும் விவசாயப் பொருள் மூலம் அமெரிக்காவின் மரபணு மாற்றப்பட்ட விதைகள் இந்தியச் சந்தைக்குள் ஊடுருவினால் அது இந்தியாவின் விவசாயத் தொழிலில் பாதிப்பை ஏற்படுத்துவதுடன், இந்தியர்களின் உடல்நலனிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் அபாயம் உள்ளது.

### அமெரிக்காவின் மரபணு விதையில் இந்தியாவின் விவசாயத்திற்கு கடும் பாதிப்பு!

இந்திய விவசாயிகளையும் வர்த்தகர்களையும் பாதிக்கும் அமெரிக்க உடனான வர்த்தக ஒப்பந்தத்தில் உள்ள அம்சங்கள் பற்றி ஒன்றிய பாஜக அரசு நாட்டுமக்களுக்கு விளக்கம் தரக் கோரினால், இந்தியாவிற்கு ஏற்படப்போகும் பிரகாசமான எதிர்காலத்தைக் கண்டு திமுக உள்ளிட்ட இந்தியா கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பொறாமைப்படுவதாக ஒன்றிய வர்த்தகத்துறை அமைச்சர் பியூஸ் கோயல் வடிகட்டிய பொய்யைச் சொல்லியிருக்கிறார். அந்த "பிரகாசமான எதிர்காலம்" என்னென்ன என்பதைப் பட்டியலிடலாமே மிஸ்டர் பியூஸ் கோயல்? தமிழ்நாட்டிற்கு வந்து அதிமுக கூட்டணிக்காகக் களமாடி அதற்கான காரண காரியங்களை எல்லாம் விளக்கும் பியூஸ் கோயல் அமெரிக்க உடனான வர்த்தக ஒப்பந்தத்தை பற்றி மட்டும் ஏன் விரிவாகப் பேச மறுக்கிறார்?

இந்தியப் பொருட்களுக்கான வரியை அமெரிக்கா 18 சதவிகிதமாக குறைத்ததை மோடி அரசின் வரலாற்றுச் சாதனையாகப் பாஜகவினர் கொண்டாடுகின்றனர். இந்தியப் பொருட்களுக்கான அமெரிக்காவின் வரி 3 சதவீதமாகவே இருந்த நிலையில் அதனை மோடி அரசுதானே தனது தவறான வெளியுறவுக் கொள்கையால் 50 சதவீதம் வரை உயர்த்தியது. அப்போது ஓடி ஒளிந்து பதுங்கியவர்கள் எல்லாம், 18 சதவிகிதமாக குறைத்ததற்கு கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். திருப்பூரில் தொடங்கி நாடுமுழுவதும் ஜவுளித்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் கடும் பாதிப்பு ஏற்பட்டபோதும் பிரதமர் மோடி எங்கே பதுங்கியிருந்தார்?

### மோடியின் சுயநலத்தால் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைக்கு பாதிப்பு!

ரஷ்யாவிடமிருந்து குறைந்த விலையில் கச்சா எண்ணெய்யை வாங்கி அதனைப் பெட்ரோலியப் பொருட்களாக மாற்றி வெளிநாடுகளுக்கு விற்று அம்பானி போன்ற பெரும் கார்ப்பரேட்டுக்கள் கொள்ளை லாபம் அடைவதற்கு உதவுவதிலேயே குறியாக இருந்த மோடி அரசு, அமெரிக்காவின் 50 சதவீத வரி விதிப்பால் இந்தியாவில் தொழில்துறை நலிவடைந்து, வேலைவாய்ப்புகள் பறிபோனதைப் பற்றிக் கவலைப்படவில்லை.

பிரதமர் மோடி தனது சுயநலத்தாலும், தவறான வெளியுறவுக் கொள்கையாலும், இந்திய விவசாயிகளுக்கும் வியாபாரிகளுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் முடிவை எடுத்தபோதும் தன்னை விவசாயி எனத் தம்பட்டம் அடித்துக்கொள்ளும் பழனிசாமி இதுவரை வாய்திறக்காமல் மவுனமாக இருக்கிறார். கார்ப்பரேட் முதலாளிகளுக்காக விவசாயிகளுக்குப் பாதகமான வேளாண் சட்டங்களை ஒன்றிய பாஜக அரசு கொண்டுவந்தபோது முட்டுக்கொடுத்த வாதாடிய எடப்பாடி பழனிசாமி இப்போது என்ன சொல்லப் போகிறார்?

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.




பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி சார்பில் தமிழ்நாடு தலைகுனியாது திராவிடம் மாடல் அரசின் 5 ஆண்டு சாதனை விளக்க தேர்தல் பரப்புரை மாபெரும் பொதுக்கூட்டம் மாவட்ட கழகத் துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன், மாநில திட்டக்குழு உறுப்பினர் மருத்துவர் எழிலன் நாகநாதன் எம். எல்.ஏ ஆகியோர் அரசின் சாதனைகளை விளக்கி சிறப்புரை ஆற்றினார்கள் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர் ராஜா எம்.எல்.ஏ., துணை மேயர் கோ. காமராஜ், மண்டலத் தலைவர்கள் வே. கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, பகுதி கழகச் செயலாளர்கள் த. ஜெயக்குமார், இ. எஸ். பெர்னார்ட், ஏ.கே. கருணாகரன், ஒன்றிய செயலாளர் ஜி.கே.ரவி, இரா. பொன்ராம், அ.தமிழ்மாறன், மூ.ரஞ்சன், எல். பிரபு ரவிச்சந்திரன் கோ. ஞானகிராமன் ஆகியோர் பங்கேற்றனர்.

## சென்னை வள்ளுவர் கோட்டத்தில்

# 1,348 பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் – பி.கே. சேகர்பாபு வழங்கினர்!

சென்னை,பிப்.5–

தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்களுக்கு, அன்றாடம் அணுகும் அரசு துறைகளின் சேவைகள், திட்டங்கள் அவர்களின் இல்லங்களுக்கு சென்று சேர்வது உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் நோக்கமாகும்.

முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் நேற்று (4.2.2026) விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம், கொள்ளார் கிராமம், சிப்காட் வளாகத்தில் நடைபெற்ற விழாவில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் 10,000 முகாம்கள் நலத்திட்டப் பயன்கள் மற்றும் 1.80 லட்சம் புதிய பயனாளிகளுக்கு சமூக பாதுகாப்புத் திட்டப் பயன்களை வழங்கினார்கள்.

இதனை அடுத்து, சென்னை மாவட்டத்தில் வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற விழாவில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு இன்று (04.02.2026) 1348 பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

சென்னை மாவட்டத்தில், உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ், பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 15 மண்டலங்கள் அடங்கிய 200 வார்டுகளில் மூன்று கட்டங்களாக 15.07.2025 முதல் 10.10.2025 வரை 400 முகாம்கள் நடத்தப்பட்டது. இதில் 13 துறைகளை சார்ந்த 43 சேவைகளின் விண்ணப்பங்கள் பெறப்பட்டது.

அதன்படி, சென்னை மாவட்டத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் கீழ் 71,185 விண்ணப்பங்கள் பெறப்பட்டு தீர்வு காணப்பட்டது. இதில் சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 6,668 மனுக்கள் பெறப்பட்டு அதில் 5,393 மனுக்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு முதல் கட்டமாக இன்று 1329 பயனாளிகளுக்கு ஆணைகள் வழங்கப்பட்டன.

இதில் மாற்றுத்திறனாளி ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் மாதம் ரூ.1,500/- வீதம் 15 பயனாளிகளும், முதியோர் ஓய்வூதியம் திட்டத்தின் கீழ் மாதம் ரூ.1200/- வீதம் 637 பயனாளிகளும், ஆதரவற்ற விதவை ஓய்வூதியம் திட்டத்தின் கீழ் மாதம் ரூ.1,000/-வீதம் 657 பயனாளிகளும், கணவரால் கைவிடப்பட்டோர் ஓய்வூதியம் திட்டத்தின் கீழ் ஓய்வூதியமாக ரூ.1,000/- வீதம் 12 பயனாளிகளும், முதிர் கண்ணி திட்டத்தின் கீழ் ஓய்வூதியமாக ரூ.1000/- வீதம் 8 பயனாளிகளும் ஆக மொத்தம் ரூ.14,63,900/- (ரூபாய் பதிநான்கு லட்சத்து அறுபத்தி மூன்றாயிரத்தி தொள்ளாயிரம் மட்டும்) மதிப்பிலான சமூக பாதுகாப்புத்திட்டங்களும், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம் மூலம் 7 நபர்களுக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் மற்றும் 7 நபர்களுக்கு நவீன செயற்கை கால் உபகரணங்களும், பெருநகர சென்னை மாநகராட்சியில் 5 நபர்களுக்கு பிறப்புச் சான்றிதழ் திருத்தம் மற்றும் புதிய தொழில் உரிமம் ஆணைகளும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மேயர் திருமதி.ஆர்.பிரியா, சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ரஷ்மி சித்தார்த் ஜகடே. , சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.சுதர்சனம் (மாதவரம்), எம்.கே.மோகன் (அண்ணா நகர்), இ.பரந்தாமன் (எழும்பூர்), த.வேலு (மயிலாப்பூர்), கா.கணபதி (மதுரவாயல்), ஜோசப் சாமுவேல் (அம்பத்தூர்), ஏ.எம்.வி.பிரபாகரராஜா (விருகம்பாக்கம்), துணை மேயர் மு.மகேஸ் குமார், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.சு.கீதா, நிலைக்குழுத்தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு உட்பட மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், பயனாளிகள் பலர் கலந்து கொண்டனர்.

## ந.கோபால் தலைமை! எஸ்.டி.கருணாநிதி வரவேற்புரை! "தமிழ்நாடு தலை குனியாது"

# திருப்பெரும்புதூர் சட்டமன்றத் தொகுதியில் கழக அரசின் சாதனை விளக்க தேர்தல் பரப்புரை!

## எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி - ஆ.ராசா எம்.பி - அமைச்சர் தா.மோ.அன்பரசன் - டி.ஆர்.பாலு எம்.பி. சிறப்புரை!

காஞ்சிபுரம், பிப். 05

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருப்பெரும்பு தூர் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. சார்பில் "தமிழ்நாடு தலை குனியாது" கழக அரசின் 5 ஆண்டு சாதனைகள் விளக்க தேர்தல் பரப்புரை மாபெரும் பொதுக்கூட்டம் நாளை (06.02.2026 வெள்ளிக்கிழமை) மாலை 5 மணிக்கு, திருப்பெரும்பு த்தூர் பேருந்து நிலையம் அருகில் நடைபெறுகிறது.

திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் ந. கோபால் தலைமை வகிக்கிறார்.

திருபெரும்புதூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் எஸ்.டி.கருணாநிதி வரவேற்புரை ஆற்றுகிறார்.

த.துரைசாமி, படப்பை ஆ. மனோகரன், அ.தமிழ்மாறன், ஏ. வந்தேமாதரம், திருமுடிவாக்கம் ஏ.மணி, பட்டூர் எஸ்.ஜபருல்லா, கோ.சத்தியமூர்த்தி, சரஸ்வதி மனோகரன், சாந்தி சதீஷ்குமார், மாலதி போஸ்கோ, உமா மகேஸ்வரி வந்தேமாதரம், இந்திராணி சுப்பிரமணி, மா.கணேஷ்பாபு, ஜா.செந்தில் தேவராஜ், எஸ். கே.பாலா (எ) பால்ராஜ், ப. இராமமூர்த்தி, கோல்ட் டி.பிரகாஷ், எல்.பிரபு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி, கழகத் துணை பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி, மாவட்டச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி, தொகுதி தேர்தல் பார்வையாளர் கே.ஜி.பாஸ்கர்சுந்தரம் ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றியக் கழக நிர்வாகிகள், ஒன்றியக் குழு உறுப்பினர்கள், நகரக் கழக நிர்வாகிகள், வார்டுக் கழகச் செயலாளர்கள், நகர்மன்ற கவுன்சிலர்கள், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக முன்னோடிகள் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

திருப்பெரும்புதூர் நகரக் கழகச் செயலாளர் இரா.சதீஷ்குமார் நன்றி கூறுகிறார்.

## அமைச்சர் தா.மோ. அன்பரசன் – இ. கருணாநிதி எம்.எல்.ஏ. சிறப்புரை!

# பல்லாவரம் வடக்கு பகுதி- தெற்கு - செம்பாக்கம் வடக்கு பகுதி தி.மு.க. செயல் வீரர்கள் கூட்டம் !

## பகுதிச் செயலாளர்கள் இ.ஜோசப் அண்ணாதுரை – இ.எஸ். பெர்னார்ட் – ஏ.கே.கருணாகரன் அறிக்கை!

சென்னை,பிப்-5.

பல்லாவரம் வடக்கு தெற்கு மற்றும் செம்பாக்கம் வடக்கு பகுதி கழகச் செயலாளர்கள் இ. ஜோசப் அண்ணாதுரை இ.எஸ். பெர்னார்ட் ஏ.கே. கருணாகரன் ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கை வருமாறு காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்ற தொகுதி பல்லாவரம் வடக்கு பகுதி பல்லாவரம் தெற்கு பகுதி மற்றும் செம்பாக்கம் வடக்கு பகுதி திமுக சார்பில் தமிழ்நாடு தலைகுனியாது செயல் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க பிப்ரவரி -11 தேதி நமது மாவட்டத்துக்கு உட்பட்ட திருவிடந்தையில் நடைபெற உள்ள மாநாட்டில் பங்கேற்பது குறித்து விவாதிக்க பகுதி கூட்டங்கள் நடத்த வேண்டும் என்று நமது மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் அறிவிப்புகளின் படி நமது பகுதி கழகங்களின் சார்பில் செயல் வீரர்கள் கூட்டம் 5-2-2026 வெள்ளிக்கிழமை அன்று மாலை 6:00 மணி அளவில் பல்லாவரம் 200 அடி ரேடியல் சாலை வேல்ஸ் காலேஜ் சிக்னல் அருகில் அமைந்துள்ள விதூர் மஹால் திருமண மண்டபத்தில் மண்டல தலைவர் பல்லாவரம் வடக்கு பகுதி கழகச் செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை தலைமையில் பல்லாவரம் தெற்கு பகுதி கழகச் செயலாளர் இ. எஸ். பெர்னார்ட் வரவேற்பில் செம்பாக்கம் வடக்கு பகுதி கழகச் செயலாளர் ஏ. கே. கருணாகரன் முன்னிலையில் நடைபெற உள்ள கூட்டத்தில் காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் கலந்துகொண்டு திருவிடந்தில் நடைபெற உள்ள BLA-2,BDA, ஆகியோர் சந்திப்பு மாநாட்டு நிகழ்ச்சியில் நமது தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்ற உள்ளார்கள்.

இந்நிகழ்ச்சியில் நமது பகுதிகழகங்களில் இருந்து எவ்வாறு சென்று பங்கேற்பது ஒவ்வொரு வார்டுகளில் இருந்து எவ்வளவு பேர் செல்வது என்பது குறித்து சிறப்புரை ஆற்ற உள்ளார்கள் மேலும் மாவட்ட கழக துணைச் செயலாளர் இ. கருணாநிதி எம் எல் ஏ மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம். எல்.ஏ தொகுதி பார்வையாளர் ரவி அஹமத் பொதுக்குழு உறுப்பினர் மாநில அணிகளின் துணைச் செயலாளர்கள் ஆகியோரும் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்ற உள்ளார்கள் எனவே நமது மூன்று பகுதிகளிலும் உள்ள பகுதி கழக நிர்வாகிகள் மாவட்ட மாநகர அணிகளின்துணை அமைப்பாளர்கள் மாவட்ட பிரதிநிதிகள் மாமன்ற உறுப்பினர்கள் வட்ட கழக செயலாளர்கள் பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் வட்ட கழக நிர்வாகிகள் பாக முகவர்கள் BLA-2 ,BDA,BLC,BYO பாக கணினி முகவர்கள் பாக இளைஞரணி அமைப்பாளர்கள் தேர்தல் பணி குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்க வட்டக் கழக செயலாளர்கள் தங்களிடம் வழங்கப்பட்டுள்ள துண்டு அறிக்கையை அனைவருக்கும் வழங்கி மேற்கண்டவர்களை கூட்டத்தில் பங்கேற்க செய்து டுமாறும் மற்றும் அனைவரும் தவறாமல் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம் என பகுதி கழகச் செயலாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.




காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி தமிழ்நாடு தலை குனியாது திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க தேர்தல் பரப்புரை மாபெரும் பொதுக்கூட்டம் மாவட்ட கழக செயலாளர்.க.. சுந்தர் எம்எல்ஏ தலைமையில் நடைபெற்றது கூட்டத்தில். தயாநிதி மாறன் எம்பி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார் உடன் மண்டல பொறுப்பாளரும் அமைச்சர். எம் ஆர் கே பன்னீர்செல்வம் . திருமதி. செம்பருத்தி துர்கேஷ். மாவட்டக் கழக நிர்வாகிகள் ஓஎஸ். தினகரன். திருமதி. கு. மலர்விழி. நகர செயலாளர் கு குமார் ஒன்றிய கழகச் செயலாளர்கள். கே கண்ணன். ஜி. தம்பு பொன். சிவக்குமார். சத்திய சாய் டி. வி. கோகுல கண்ணன் பேரூர் செயலாளர்கள் ஆ சுந்தரமூர்த்தி. வி.டி ஆர்.வி. எழிலரசன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள். கலந்து கொண்டனர்.



சென்னை மேற்கு மாவட்ட கழக ஆலோசனை கூட்டம் நேற்று (4.2.2026 – புதன்கிழமை) மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு 2026 சட்டமன்ற தேர்தல் பணிகள் மற்றும் கழக வளர்ச்சி குறித்து பேசினார். இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள் து.விக்டர், ஆர்.என்.துரை, வி.எஸ்.கலை, ஆ.சங்கீதா, ஜெ.எஸ். அகஸ்டின்பாபு, ஐ.கென்னடி, தொகுதி பார்வையாளர்கள் வே.கௌதமன், சி.எச்.சேகர், சைதை சாதிக், பகுதி செயலாளர்கள் ந.இராமலிங்கம், மா. பா.அன்புதுரை, ஏஆர்பி.எம்.காமராஜ், எஸ்.மதன்மோகன், ச.பரமசிவம், வினோத் வேலாயுதம், வட்ட கழக செயலாளர்கள் மற்றும் அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.